**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**KILVELUR**

**CC 588/2023**

LW 3PW3

| | | | |
|---|---|---|---|
| Name | சிவாஜிராஜா | Caste | |
| Father's/Husband Name | காத்தமுத்து | Calling | |
| Village | புத்தூர் மெயின் ரோடு | Religion | |
| Taluk | | Age | 55/2025 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**20-08-2025**

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் புத்தூர் மெயின் ரோட்டில் வசித்து பேருந்தில் டிரைவராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்ததால் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.** )

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் அகலங்கண் ஊரைச் சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா. 1 க்கும் இடையே நடந்த தகராறு பற்றி எனக்கு எதுவும் தெரியாது- சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாக போலீசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 27.07.2023 ம் தேதி இரவு 10.30 மணியளவில் அகலங்கண் பகுதியை சேர்ந்த ஆஜர் எதிரிகள் அ.சா. 1

அய்யம்பெருமாள் என்பவரிடம் தகராறு செய்து எதிரி சௌந்தராஜன் செங்கல்லால் அ.சா.1ஐ தாக்கியதாகவும், சிவக்குமார், ஹரிகரன், கிரி ஆகியோர் கட்டையால் தாக்கி அடித்ததாகவும் தடுக்க வந்த தேவதர்ஷினியை மேற்படி 4 எதிரிகளும் முடியை பிடித்து கீழே தள்ளியதாகவும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அதனை நான் நேரில் பார்த்ததாகவும் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் நான் டிரைவராக வேலை செய்யும் பேருந்தில் வந்து செல்வதின் அடிப்படையில் பழக்கம் உள்ளவர்கள் என்பதால் அவர்களை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/- ர. மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கீழ்வேளூர்.